# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | குடியியற்கல்வி<br>சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

- **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பாடசாலையின் தலைவராகச் செயற்படுபவர்
   1) பிரதிக்கல்விப் பணிப்பாளர் 2) அதிபர்
   3) வலயக் கல்விப் பணிப்பாளர் 4) ஆசிரியர்

2. மனிதர்களிடம் காணப்படுகின்ற பலவீனங்கள்
   1) பிறர் நலம், அன்புகாட்டுதல் 2) பொறுமையின்மை, சந்தேகப்படல்
   3) சுயநலம், பிற உயிர்களை நேசித்தல் 4) பெறுமை, சந்தேகப்படல்

3. இலங்கை அரச மருந்தகசாலையை நிறுவியவர்
   1) கலாநிதி C.W.W. கன்னங்கரா 2) திரு. டீ.எஸ். சேனநாயக்க
   3) பேராசிரியர் சேனக பிபிலே 4) திரு. கொல்வின் டீ. சில்வா

4. திட்டமிடாது செயற்படுகின்ற மாணவனுக்குரிய இயல்புகளில் ஒன்று
   1) கருமங்கள் ஒழுங்கின்றி அமைதல் 2) புத்தாக்கத்தில் ஈடுபடுவர்
   3) முறையொன்று இருக்கும் 4) நோக்கத்தை அடைந்துகொள்வர்

5. மாணவர்களிடையே தமது பாடசாலையின் மீது கௌரவம், அபிமானம், அன்பு என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது
   1) பாடசாலைக்கொடி 2) பாடசாலைச் சீருடை
   3) பாடசாலைக் கீதம் 4) மகுட வாசகம்

6. பாடசாலைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்தவும், அவர்களிடையே பரஸ்பர உறவினைப் பேணவும் உருவாக்கப்பட்ட அமைப்பு
   1) பழைய மாணவர் சங்கம் 2) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
   3) விளையாட்டுக்கழகம் 4) சுற்றாடல் முன்னோடிக் குழு

7. தனது கட்டுப்பாட்டிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளையும் பரிபாலிப்பதுடன் அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர்
   1) மாவட்டச் செயலர் 2) ஆளுநர் 3) நகரபிதா 4) பிரதேச செயலர்

8. இலங்கையின் நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை
   1) இருபத்து இரண்டு 2) இருபத்தைந்து 3) இருபத்து ஒன்று 4) இருபத்து ஒன்பது

9. பின்வருவனவற்றுள் இயற்கை வளங்கள் உள்ளடங்கிய விடை
   1) கட்டடம், குளம் 2) வயல், வீதி
   3) சமவெளி, நீர்வீழ்ச்சி 4) ஆறு, தளபாடங்கள்

10. கிராம மக்களின் வாக்காளர் இடாப்பினைப் பேணல், அவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல் போன்ற கருமங்களை ஆற்றுபவர்
    1) கிராம உத்தியோகத்தர் 2) மாகாண ஆளுநர்
    3) அரச அதிபர் 4) பிரதேசசபை செயலாளர்

11. பிரதேச மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக இருபத்து நான்கு மணிநேரமும் சேவை வழங்கும் நிறுவனம்
   1) வைத்தியசாலை
   2) சென். ஜோன்ஸ் அப்புலன்ஸ்
   3) மாநகர சபை
   4) மருந்து விற்பனை நிலையம்

12. சேவையைப் பெற்றுக்கொள்பவர்கள் ஆற்றவேண்டிய கடமை
   1) பொதுமக்களுடன் நட்புறவுடன் செயற்படல்
   2) முறையற்ற வகையில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்
   3) வரிப்பணத்தை முறையாகச் செலுத்துதல்
   4) பொதுச் சொத்துக்களைத் துஸ்பிரயோகம் செய்தல்

13. மரியாதை மிக்க உரையாடலின் பண்பு அல்லாதது
   1) அடக்கமாக உரையாடுதல்
   2) சரளமாகப் பேசுதல்
   3) அனைவரும் விரும்பக்கூடியவாறு பேசுதல்
   4) பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தல்

14. நுணுக்கமாகச் செவிமடுப்பவர் வெளிப்படுத்தும் பிரதிபலிப்பு
   1) அவதானமாகச் செவிமடுக்காமை
   2) கேள்வி கேட்டல்
   3) அக்கறையின்மை
   4) வேறு விடயங்களில் கவனம் செலுத்துதல்

15. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நடவடிக்கை
   1) ஒழுக்கசீலராய் வாழ்தல்
   2) போதைவஸ்துப் பாவிப்போருடனான சகவாசம்
   3) சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடல்
   4) நேர்மையாகச் செயற்படல்

16. வளங்களின் வீண்விரயத்தைத் தடுப்பதால் ஏற்படம் நன்மை
   1) வளப்பற்றாக்குறை
   2) சூழல் மாசடைதல்
   4) பணம் மீதப்படல்
   4) நீர்ப்பற்றாக்குறை

17. இந்தியாவில் உற்பத்தி செய்த ஆடைகளை மாத்திரம் பயன்படுத்தி தேசியத்தை மதிக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்
   1) நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்
   2) மகாத்மா காந்தி
   3) அறிஞர் அண்ணா
   4) அன்னை தெரேசா

18. பொதுச் சொத்துக்களின் இயல்பாக அமைவது
   1) சுயநலத்தன்மை கொண்டவை
   2) வசதி படைத்தவர்கள் மட்டும் பயன்பெறமுடிதல்
   3) இலாப நோக்கம் கருதாது வழங்கப்படுபவை
   4) பணமீட்டுதலை நோக்கமாகக் கொண்டவை

19. சட்டத்தை மீறுவோருக்குத் தண்டனை வழங்கும் அதிகாரத்தைக் கொண்ட நிறுவனம்
   1) பொலிஸ் நிலையம்
   2) மனித உரிமை ஆணைக்குழு
   3) இணக்க சபை
   4) நீதிமன்றம்

20. வளி மாசடைவதன் காரணமாக ஏற்படுகின்ற பாதக விளைவு அல்லாதது
   1) நோய்கள் ஏற்படல்
   2) வெப்பநிலை அதிகரித்தல்
   3) ஓசோன்படை சிதைவடைதல்
   4) வாயுக்களின் அளவு குறைதல்

(2×20=40 புள்ளிகள்)

பகுதி - II

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) 1. மூன்றாம் தவணையில் குடியியற் கல்விப்பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகையைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
2. அக்கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகு யாது? (02 புள்ளிகள்)
3. அக்கணிப்பீட்டிற்குத் தேவையான தகவல் திரட்டிய வழிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
4. அக் கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்ததால் பெற்றுக்கொண்ட பயன்கள் இரண்டு எழுதுக. (04 புள்ளிகள்)

02) 1. உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவுகின்ற மூலாதாரங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
2. மாணவர்கள் நிறைவேற்றவேண்டிய கடமைகள் மூன்று தருக.
3. திட்டமிட்டு, ஒழுங்கமைத்துச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று எழுதுக.
4. பாடசாலையின் மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகள் மூன்றைக் குறிப்பிடுக.
(3×4=12 புள்ளிகள்)

03) 1. உமது பாடசாலையின்
   1. மகுடவாசகம்
   2. நோக்கக்கூற்று
   3. பணிக்கூற்று
   
   என்பவற்றை எழுதுக.
2. பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான பொதுவான சட்டதிட்டங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3. பாடசாலை இலச்சினையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
4. பாடசாலைக்கீதம் இசைக்கப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் மூன்று எழுதுக.

(3×4=12 புள்ளிகள்)

04) 1. பிரதேச மக்கள் ஒற்றுமையுடன் செயற்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினைத் தருக.
2. ஒற்றுமையாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக.
3. உமது பிரதேசத்தில் செயற்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் மூன்று குறிப்பிடுக.
4. பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகள் மூன்று எழுதுக.
(3×4=12 புள்ளிகள்)

05) 1. கௌரவமான மொழியைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக.
2. நுணுக்கமாகச் செவிமடுக்காமையால் ஏற்படும் பாதக விளைவுகள் மூன்று எழுதுக.
3. சிறந்த ஒழுக்க மாண்புகளைப் பேணுவதன் முக்கியத்துவம் மூன்று தருக.
4. நாம் வீதிகளில் பிரயாணிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நன்னடத்தைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3×4=12 புள்ளிகள்)

06) 1. நீரிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் பயன்களில் மூன்றைக் குறிப்பிடுக.
2. மின்சார வீண்விரயத்தைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று விடயங்களை எழுதுக.
3. நிலம் மாசடைகின்ற வழிமுறைகள் மூன்று தருக.
4. சிறந்த பிரஜை என்னும் வகையில் சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மூன்று தருக.

(3×4=12 புள்ளிகள்)